1967 ஜூன் 22]

Dr. H. V. HANDE : Are the Government aware of the fact that there is a great deal of discrepancy between the aluminium factory price in the Madras State and the world aluminium price and the price of the aluminium that comes out of the local factory is much higher than the world prices? If so, will the Government examine this matter and take necessary action to see that the price descrepancy is not much between the Madras aluminium price and the world price?

The Hon. Thiru. C. N. ANNADURAI : The points referred to by the hon. Member will be taken into account; but, at present I am not posted with all the necessary facts about the working of the Aluminium factory at Mettur.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, நீலகிரியிலே எவ்வளவு பாக்ஸைட் கிடைக்கும் என்பதை அமைச்சரிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன். அதிகமாகக் கிடைக்குமானல் அங்கு ஒரு அலுமினியம் உற்பத்தி தொழிற்சாலையை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலையிலும், கொல்லி மலையிலும் பாக்ஸைட் கனி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அது எடுக்கப்படு கிறது. நீலகிரியிலும் பழனி மலையிலும் இந்தக் கனிப் பொருள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வல்லுநர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு கனிப்பொருள் இருக்கும் என்று தெரிந்த பிறகு வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

*46. வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் அலுமினியம் உருக்குந் தொழிற் சாலையை ஏற்படுத்தும் நோக்கம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆண்டு ஒன்றிற்கு 25,000 மெட்ரிக் டன் அலுமினிய பாளங்களும், 10,500 மெட்ரிக் டன் அலுமினிய வார்ப்படமும் தயாரிப்பதற்கான தொழில் நிறுவனம் ஒன்றைச் சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூரில் அமைப்பதற்கான உரிமம் சென்னை அலுமினியம் கம்பெனிக்கு வழங்கப்பட்டுள்ளது. அலுமினிய வார்ப்படங்களின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றிற்கு 15,000 டன்களாக அதிகரிக்க அனுமதிக் கடிதம் ஒன்றும் இக் கம்பெனிக்கு வழங்கப்பட்டிருக் கிறது. வேறு தொழில் யூனிட்டுகள் எவற்றையும் நிறுவும் செயற் குறிப்பு இல்லை.

Dr. H. V. HANDA : Sir what is the working capacity and also the installed capacity of that factory? What is it exactly that

comes out of the factory? Is there any discrepancy between the capacity that is put on the paper and the actual aluminium that comes out of the factory?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இப்போது 10,000 டன் உற்பத்தி ஆகும் அளவுக்குத் திறன் பெற்றிருக்கிறது. பதினையாயிரம் டன் அளவுக்கு அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது. ஐம்பதாயிரம் டன் அளவுக்கு உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு அவர்கள் விதிப்படி அனுமதி கோரியிருக்கிறார்கள். அது இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பழனியில் கிடைக்கும் அந்த பாக்ஸைட்டையும் சேர்த்து 50,000 டன் அளவுக்குப் போகலாம் என்று சொல்கிறார்கள். பழனியில் எவ்வளவு பாக்சைட் கிடைக்கும் என்று தெரியாத காரணத்தினால், அது தெரிந்த பிறகு தான் அனுமதி அளிப்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

DR. H. V. HANDE : Will the Hon. Minister be pleased to state the capital outlay of this plant or the amount that is going to be invested in this plant?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அது பற்றிய விவரத் திற்குத் தனிக்கேள்வி போடவேண்டும்.

THIRU T. MARTIN : Will the Hon. Minister be pleased to state whether the Company is sponsored by the State Government or whether it is a private company or a quasi-private company?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தனியார் கம்பெனி தான்.

**திரு. ந. தருமலிங்கம்** : தலைவர் அவர்களே, அலுமினியம் கண்டு பிடிக்கப்படும் இடத்தில் மட்டுமே தொழிற்சாலை ஏற்படுத்தப் படுமா? அலுமினியம் கண்டுபிடிக்கப்படாத இடத்திலும் தொழிற் சாலைகள் ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: பெரும்பாலும் அலுமினியம் இருக்கிற இடத்தில் தான் தொழிற்சாலை அமைய முடியும். சேலத்தில் இருக்கும் தொழிற்சாலை சௌராஷ்டிரா விலிருந்து பாக்ஸைட்டை வரவழைத்து உற்பத்தி செய்யும் நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. பழனியில் 5 கோடி ரூபாய் செலவில் ஒரு தொழிற்சாலை அமைக்க வங்காளக் கம்பெனி அனுமதி கோரி யிருக்கிறது. பழனியில் எவ்வளவு கனிப்பொருள் கிடைக்கும் என்று தெரியாத காரணத்தினால் அனுமதி அளிக்கப்படவில்லை; அது பரிசீலனையிலிருக்கிறது.

**திரு. எ. ஆர். சுப்பையா முதலியார்**: தலைவர் அவர்களே, அந்த விரிவு படுத்தும் திட்டத்தில் சர்க்கார் பங்கு எடுக்கும் யோசனை இருந்து கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இப்போது அந்த மாதிரி யோசனை இல்லை.

1967 ஜூன் 22]

**திரு. எம். சுரேந்திரன்** : தலைவர் அவர்களே மதராஸ் அலுமினியத்தின் உற்பத்தித் திறனை 50,000 டன் அளவுக்கு உயர்த்துவதற்கு அனுமதி கோரப்பட்டிருக்கிறது என்று சொல்லப் பட்டது. அதற்கு வேண்டிய பாக்ஸைட் கிடைக்கிறதா? இப்போதே சௌராஷ்டிராவிலிருந்து கனிப்பொருள் வருகிறது என்று சொல்லப்பட்டதே, எதை அடிப்படையாக வைத்துத் திறனை உயர்த்த அனுமதி அளிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இப்போது 15,000 டன் அளவுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. பழனியில் கிடைப்பதைச் சேர்த்து 50,000 டன் அளவுக்கு உயர்த்துவதற்கு அனுமதி கோரியிருக்கிறார்கள். பழனியில் கிடைக்கும் அளவு தெரியாத வரையில் 50,000 டன் அளவுக்கு உயர்த்துவதற்கு அனுமதி கிடைக்காது. அதன் பிறகுதான் அனுமதி அளிப்பது பற்றி யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினாக்கள் 47-ம், 48-ம் வினாக்கள் நேரம் முடியும் வரையில் தள்ளி வைக்கப்படுகின்றன.

## கிணறு வெட்டுவதற்கான கடன்

* 49 வின.—**திரு. வி. கே. கோதண்டராமன்**: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்கான கடன் ரொக்கமாகக் கொடுப்பதற்குப் பதிலாக சர்க்காரே கிணறு வெட்டிக் கொடுத்து உதவி செய்யும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : (அ) & (இ) விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்கான கடன் ரொக்கமாகக் கொடுப்பதற்குப் பதிலாகச் சர்க்காரே கிணறு வெட்டிக் கொடுத்து உதவி செய்யும் உத்தேசம் பொதுவாக இல்லையென்றாலும், மதுரை மாவட்டக் கலெக்டர் அவர்கள் ஒரு மாதிரித் திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி 20 அடியிலிருந்து 30 அடிக்குள் தண்ணீர் இருக்கிற பிளாக் ஒன்றை எடுத்துக் கொண்டு, அங்கே சாதாரணமாக இப்போது கொடுப்பதைப்போல கிணறுகளுக்குக் கடன் வசதிகளைக் கொடுத்து, அந்தக் கடன் வசதிகளைச் சர்க்காரே ஏற்றுக்கொண்டு, மூன்று மாத காலத்திலே கிணறுகளை வெட்டிக் கொடுக்கலாம் என்ற மாதிரித் திட்டத்தை மதுரை மாவட்டக் கலெக்டர் அவர்கள் தயாரித்திருக்கிறார்கள். இப்போது இருக்கிற தக்காவிக் கடன் மூலம் கிணறுகள் வெட்ட 1 வருஷம், 2 வருஷம், 3 வருஷம்கூட ஆகிற காரணத்தினால், மூன்று மாதங்களுக்குள் கிணறுகள் வெட்டி கொடுக்கும் முறையில் மதுரை மாவட்டக் கலெக்டரின் திட்டத்தைப் பரீட்சார்த்தமாக, ஒரே பிளாக்கை எடுத்து 200 கிணறுகளை வெட்டலாமா என்பது விவசாய இலாகாவின் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது.